//மிகமிக அவசரம் //

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள்: சென்னை-6.**

**ந.க.எண்.031696/எம்/இ1/2021, நாள்.01.09.2022.**

பொருள்: பள்ளிக்கல்வி - மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற கூட்டத் தொடர் அறிவிப்பு எண்.110 இன்படி 2022-23 ஆம் ஆண்டிற்கான மகாகவி பாரதியார் நினைவு தினம் - கவிதைப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல்- வருவாய் மாவட்ட அளவில் 05.09.2022 அன்று கவிதைப் போட்டிகள் நடத்தி, அதில் சிறந்த ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவியை தெரிவு செய்து விவரம் அனுப்பி வைக்கக் கோருதல்-தொடர்பாக.

பார்வை: 1.அரசுக் கடித எண்.10297/நிதி2/2021-8, நாள்: 04.10.2021

2.மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற கூட்டத் தொடர் அறிவிப்பு எண்.110.நாள்: 07.09.2021.

3.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்: 05.10.2021.

*****

பார்வையில் காணும் அரசுக் கடிதம் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி வரும் 2022-23 முதல் மகாகவி பாரதியார் நினைவு தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கவிதைப் போட்டிகள் நடத்தி சிறந்த படைப்புகளை தெரிவு செய்து அந்த மாணவ, மாணவியர்களுக்கு **"இளம் கவிஞர் விருது"** மற்றும் பரிசுகள் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, பார்வை 3ல் காணும் பள்ளிக் கல்வி ஆணையரக செயல்முறைக் கடிதத்தின் பொருள் சார்ந்து அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. மேலும், பள்ளிக் கல்வி ஆணையரக செயல்முறைக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளவாறு மகாகவி பாரதியார் நினைவு தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு 2022 ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தில் ஒன்றிய அளவில் மாணவ, மாணவியர்களுக்கு கவிதைப் போட்டிகள் நடத்தி, அதில் சிறந்த 3 மாணவர்கள் மற்றும் 3 மாணவிகளை தெரிவு செய்யவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

POCO
SHOT ON POCO F1

எனவே, மேற்படி ஒன்றிய அளவில் தெரிவு செய்யப்பட்ட மாணவ, மாணவியருக்கு வருவாய் மாவட்ட அளவில், 05.09.2022 திங்கட்கிழமை அன்று கவிதைப் போட்டியினை நடத்தி, அதில் சிறந்த ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவியை தெரிவு செய்து அம்மாணவர்களின் பெயர், பெற்றோர் பெயர், பயிலும் பள்ளி, மாவட்டத்தின் பெயர் மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றினை 05.09.2022 திங்கட்கிழமை அன்று மாலை 5.00 மணிக்குள் இவ்வலுவலக மின்னஞ்சல் msectndse@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் வருவாய் மாவட்ட அளவில் தெரிவு செய்யப்பட்ட மாணவ, மாணவியருக்கு மாநில அளவிலான கவிதைப் போட்டி எதிர்வரும் 09.09.2022 அன்று சென்னை–8, எழும்பூர், மாநில மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மேற்படி மாநில அளவிலான கவிதைப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ / மாணவியர்களை 09.09.2022 வெள்ளிக்கிழமையன்று காலை 9.00 மணியளவில் சென்னை–8, எழும்பூர், மாநில மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு உரிய பாதுகாவலருடன் வருகை தரும் வகையில் தகுந்த ஏற்பாடுகள் மற்றும் அறிவுரைகளை வழங்கிடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மேற்படி 09.09.2022 வெள்ளிக் கிழமையன்று காலை 9.00 மணியளவில் சென்னை–8, எழும்பூர், மாநில மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் மகாகவி பாரதியார் நினைவு தின கவிதைப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கான இடவசதி, கழிப்பிட வசதி, குடிநீர் வசதிகள் ஏற்படுத்தி தரவும் மற்றும் மாநில அளவிலான கவிதைப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவியரின் படைப்புகளிலிருந்து மாநில அளவில் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவியை நடுவர்கள் மூலம் தெரிவு செய்து அவர்களின் விவரத்தினை இவ்வாணையரகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

POCO

மாநில அளவிலான கவிதைப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவியரின் படைப்புகளிலிருந்து மாநில அளவில் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவி தேர்ந்தெடுக்கப்பட்டு மகாகவி நினைவு தினத்தன்று **"இளம் கவிஞர் விருது"** வழங்கி சிறப்பிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக்கல்வி ஆணையருக்காக

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள்

நகல்

அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக் கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–09 (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது).